தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௬	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௨ விகிருதி—பங்குனி 1951—மார்ச்	மலர் ௰௨

பொழிற்றொண்டர் கருத்துரைகள்

திருவருட்பெருக்கால் தமிழ்ப்பொழில் ௨௰௬-ஆவது துணர் இம் மலரோடு நிறைவுறுகின்றது. பொழிலன்பர்கள் இதுகாறும் காட்டிய ஆதரவைப் பெரிதும் பாராட்டி நன்றி செலுத்துவதுடன், தம் ஆதரவைப் பெருக்கிப் பொழில் மேன் மேலும் தழைத்துச் செழிக்க அருள் மழை பொழிய வேண்டு கின்றோம்.

* * * * *

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர்கள்.

நம் சங்கச் சார்பில் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலவர்களைக் குறித்த சொற்பொழிவுகள் தொடர்ந்து நிகழ விருக்கின்றன. முதலாவதாக நிகழும் விகிருதி, மாசி, ௨௨, (6—3—51) செவ்வாய்க் கிழமை பிற்பகல் நம் சங்க அமைச்சர் திருவாளர். நீ. கந்தசாமி பிள்ளை யவர்கள் 'இராமலிங்க அடிகளார்' என்ற தலைப்பில் அடிகளாரது இலக்கிய நயங்கள்

என்னும் பகுதிமேல் பல அரிய கருத்துக்களை எடுத்து விளக்கினார்கள். தஞ்சை மாவட்டத் தலைவர் திருவாளர் T.K. சங்கரவடிவேற் பிள்ளை யவர்கள் தலைமை தாங்கிச் சொற்பொழிவு வரிசையைத் தொடங்கி வைத்து அன்றைச் சொற்பொழிவின் சிறந்த கருத்துக்களைப் பாராட்டியதுடன் தாம் கண்ட பல அரிய கருத்துக்களையும் எடுத்துரைத்து அவையினரை மகிழ்வித்தார்கள்.

அடுத்த சொற் பொழிவு இராமலிங்க அடிகளாரது வாழ்க்கை வரலாறு பற்றி நிகழும்.

* * * * *

திருவள்ளுவர் திருநாள்.

திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர் உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி அம்பலவாணர் கழகச் சார்பில் 1951. பிப்பிரவரி, 24-ஆம் நாள் சனிக்கிழமை பிற்பகல் திருவள்ளுவர் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அதுபோது தஞ்சை அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தலைவர் திரு. K. சம்பந்தம் பிள்ளை அவர்கள், B. A., L. T., தலைமை தாங்கினார்கள். கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் திரு. K. அடிகளாசிரியர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார்கள். கரந்தை, மருத்துவர் (டாக்டர்) திரு. கோபாலகிருட்டினன் அவர்கள் திருக்குறள் போட்டிப் பரிசு வழங்கினார்கள். சென்னை நிலவுரிமை ஒதுக்கல் முறை மன்ற மதுரைப் பகுதித் தலைவர் திரு. ஆ. கசபதி நாயகர் அவர்கள், B. A., B. L., 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்' என்னும் குறட் பொருள் மேல் ஒரு சிறந்த விரிவுரை நிகழ்த்தினார்கள். தஞ்சை திரு. கேசவன், திரு. சேதுராமன் குழுவினர் வேய்ங்குழல் இன்னிசை வழங்கினார்கள்.

* * * * *

ஆண்டுவிழா.

தி. ஆ. அ. தே. கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் ௩ ஆம் ஆண்டுவிழா திருவள்ளுவர் ஆண்டு மாசித் திங்கள், ௬ ஆம் நாள் (18-2-1951) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் நம் சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. S. ஆறுமுக முதலியார் அவர்கள், M. A., B. O. L., L. T., சீரிய தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு. முதலியார் அவர்கள் தம் தலைமை உரையில் 'இலக்கிய ஆராய்ச்சி' என்னும் பொருள் குறித்துச் சிறந்த விரிவுரை நிகழ்த்தினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து விலங்கு நூற் பேராசிரியர் (Professor of Zooloy) திரு. பேரறிஞர் (Dr) கோவிந்தன் அவர்கள் "மேனாட்டு வாழ்வியல்" சிறப்பு முறையைத் தெளிவாக விளக்கி உரைத்தார்கள்.

* * * * *

துயரம்.

நம் சங்கப் பழைய உறுப்பினரும் திருப்பதி திருவேங்கடவன் கீழ்க்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும், சிறந்த ஆராய்ச்சி யறிஞரும் ஆய திரு. தி. பொ. பழநியப்ப பிள்ளையவர்கள் 1951, பிப்ரவரி, முதல் நாள் மாலை திருப்பதியில் மறைந்த கொடுஞ் செய்தி தமிழர்களுக்கெல்லாம் பெருந் துயர் தருவதாயிற்று. நம் சங்கத்திடத்தும் நம்மிடத்தும் பேரன்பு பூண்டொழுகிய இவர்கள் பிரிவு ஆற்றெணாததாகும்.

* * * *

நம் சங்கத்துப் பழைய உறுப்பினரும், தமிழன்பருமாகிய திருச்சிராப்பள்ளி, திரு. அ. சதாசிவம் பிள்ளை யவர்கள் விகிருதி, தை, 20-ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலஞ் சென்ற செய்தி யறிந்து வருந்துகின்றோம்.

* * * * *

நம் சங்கத்தொண்டுகளை அறிந்து மெச்சி மிக அன்புடன் பெரும் பொருள் உதவிய வடபாதிமங்கலம் திரு. சோ. சானகியம்மையார் அவர்கள் இறைவன் திருவடி அடைந்த செய்தியறிந்து வருந்துகின்றோம். வடபாதிமங்கலப் பெரு நிலக்கிழவர் திருவாளர் வ. சோ. தியாகராச முதலியார் அவர்கள் திருவாளர் G. இராமாநுச முதலியார் அவர்கள் முதலியவர்கட்கு நம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

* * * * *

மகிழ்ச்சி.

நம் சங்க வாணுள் உறுப்பினரும், சங்க மேம்பாட்டில் ஈடுபட்டுப் பொருள் துறையில் பேருதவி புரிந்து வருபவரும் ஆய அன்பர் திரு. நு. சிவ. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் விகிருதி, தை, 21-ஆம் நாள் தம் அறுபதாவது ஆண்டு நிறையப் பெற்றுப், பல்லாண்டு பல்லாண்டு வாழச் சங்கத் தாலும், அன்பர்களாலும் பாராட்டி வாழ்த்தப் பெற்றார்கள். வாழ்க! வாழ்க! வென்று வாழ்த்துகின்றோம்.

யாழ் நூல்

பேராசிரியர் விபுலானந்த அடிகளார், பதினான்கு ஆண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது. தோற்றம் பொலிந்தது.
விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

வட்டெழுத்தா அல்லது வெட்டெழுத்தா ?

திரு. கோ. தியாகராாசன், G. M. V. C., தஞ்சை

வேறுவகை எழுத்திலிருந்து பிரித்துக் காட்ட, 'வட்டம் என்னும் அடைமொழியைப் பெற்று அமைந்தது, 'வட்டெழுத்து' என்னும் புணைச்சொல். எனவே, இவ்வெழுத்துக்கள் தோன்றிய காலத்தில் வட்டமில்லாத எழுத்துக்கள் நம் நாட்டில் நிலவி யிருந்திருக்கவேண்டும். அதாவது, கோண எழுத்துக்கள் (Cuniform writings) போன்றன இருந்திருக்கவேண்டும்.

சங்க இலக்கியங்களில், எழுத்து, கண்ணெழுத்து, கோலெழுத்து, எண்ணெழுத்து என்பன இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், வட்டெழுத்து என்னும் சொல் கிடையாது மேலும், வடிவு, குறி, தன்மை, முடிவு என்பன எழுத்துக்களின் பெயர்களாக நூல்கள் கூறுகின்றன.

ஆகையால், 'வட்டெழுத்து' என்னும் சொல் சில நூற்றுண்டுகளுக்கு முன் தோன்றியதே யன்றி மிக முற்பட்ட காலத்தில் இச்சொல் இல்லை.

மேலும், வட்டெழுத்துக்கள் என்று பெயரிடப்பட்டு, கல்வெட்டுகளிலும், பட்டயங்களிலும் உள்ள எழுத்துக்கள் எந்த வகையில் 'வட்டம்' என்னும் அடைமொழி ஏற்பதற்குத் தகுதியுடையன என்பதை யாரேனும் எடுத்துக் காட்டுவாரா?

உலகத்திலுள்ள எல்லா வகை எழுத்துக்களும் நேர் கோடு, வளைவு, வட்டம், கொக்கி, புள்ளி இவைகளால் அமைக்கப்பட்டவைகளே.. எனவே, எல்லா வகை எழுத்துக்களிலும் வட்டமும், வட்டத்தின் பகுதியாகிய வளைவும் சேர்ந்தனவே. இவ்வாறமைந்த எழுத்துக்களில் வட்டங்களோ அல்லது வளைவுகளோ மிக உள்ளனவாயின், அவ்வெழுத்துக்களுக்கு 'வட்டம்' என்

னும் அடை சொல் கொடுக்கலாம். வட்டெழுத்துக்க ளென்று பெயர் தாங்கும் தமிழ் எழுத்துக்கள் இத்தன்மை உடையன வல்ல.

நான் பல நூல்களிலும், பல நாடுகளிலும் உள்ள எழுத்துக் களை ஒப்பிட்டுப் பார்த்த பொழுது, பர்மியர் எழுத்துக்களே மிக்க வட்டங்களும், வளைவுகளும் பொருந்திய எழுத்துக்க ளெனத் துணிந்தேன்.

ஆனல், பல நூற்றுண்டுகளுக்கு முன் நம் மக்கட்கு பிற நாட்டு மொழிப் பயிற்சி இல்லாததால், நம் நாட்டில் வழங்கின எழுத்துக்களில், கற்களிலும், செப்புப் பட்டயங்களிலும் வெட் டப்பட்ட எழுத்துக்கள் மிக்க வளைவுகளைக் கொண்டிருந்தன வாதலால், அவைகளை வட்டெழுத் தென்றனரோ என்னவோ !

வட்டெழுத் தென்னும் பிணைச்சொல்லி லுள்ள அடை கொள்ளி யாகிய 'எழுத்து' என்பதற்கு என்ன பொருள்? எழுத்து என்னும் சொல்லிற்கு 'எழு' என்பதே அடிவேர். எனவே, மிகப் பண்டைக் காலத்திய எழுத்துக்கள் எழும்பியவை களா யிருந்திருக்க வேண்டும். (Raised characters)

உலகத்தி லிருந்த மிகப் பண்டை மக்களைப் போல் நம் தமிழ் மகனும் களிமண்ணல் உருவங்களைச் செய்தான். இத்தகைய உருவங்கள் பண்டை மக்கள் புதைக்கப்பட்டிருந்த தாழிகளில் கண்டெடுக்கப்பட்டன வென்பதை நாம் அறிந்ததே, இவை களை ஆங்கிலத்தில் arte-facts என்பர்.

இவ்வாறு செய்த உருவங்களைக் கொண்டு தன் கருத்துக் களை வெளிப்படுத்தத் துவங்கிய பண்டையன் ஒரு வழியைப் பின் பற்றியிருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, வேட்டையைக் குறிக்க, ஒரு மனிதனை யும், ஒரு அம்பையும், ஒரு படுத்துக் கிடக்கும் மானையும் (அதா வது செத்த மான்) வடிவுகளால் குறித்திருக்கலாம். இது போலவே, தன்னையும், அம்பையும், மடிந்த மாற்றானையும்

செய்து தான் போரில் அடைந்த வெற்றியைக் குறித்திருக்கலாம். பின், இவ் வடிவுகளை ஒரு களிமண் தட்டிலோ அல்லது தரையிலோ வரிசையாய் அமைத்துத் தன் கருத்துக்களை விளக்கி யிருக்கலாம். இது தான் 'வடிவு' எழுத்துக்கள் தோன்றிய காலம் போலும். இவ்வாறான எழுந்த எழுத்துக்கள் (Bas-relief) உள்ள மண் தாழிகளைச் சீனர்கள் இன்றும் செய்து வருகின்றனர்.

இக்காலத்திற்குப் பிறகு அவ்வடிவுகளின் வெளிக்குறிப்பை (Outline) களிமண் தட்டில் குச்சிகளாலோ, கோல்களாலோ வரைந்து குறித்தான் போலும். (வரை = To draw the outline) 'இந்தியா படத்தை வரை' என்றால், ஒரு மாணவன் கோடுகளால் இந்தியாவின் வெளி வடிவைக் காட்டுவான். ('வரை' என்னும் சொல் பல பொருள் பெற்றதற்குக் காரணங்கள் பின்னொரு கட்டுரையில் விளக்குவேன்). இவ்வாறாக வரையப் பட்டனவே குறிகளாயின போலும். (குறி = Sign. From this word we get 'signify' In Tamil குறி is both verb and noun) எனவே, 'வரைதல்' என்னும் சொல் எழுதுதல் என்னும் பொருள் பெற்றது. இன்னும் பிற்பட்ட காலத்தில் பனை ஓலைகளில் எழுத்தாணியால் கீறிட்டு (Scratch) எழுதுவதையும் வரைதல் என்பதும் வழக்கு.

பனை ஓலைகளில் எழுதப்பட்ட முறிகளும் (Documents) நூல்களும் அழிந்து போவதைக் கண்ட நம் மக்கள், ஏறக்குறைய பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் தங்கள் கொடைகளையும், அறச்செயல்களையும், வீரச் செயல்களையும் கற்களிலும், செப்புப்பட்டயங்களிலும் செதுக்கி (வெட்டி) வைத்தனர்.

இவ்வாறு வெட்டப்பட்ட எழுத்துக்கள் வெட்டெழுத்துக்களே யன்றி வட்டெழுத்துக்களாகா!

வெட்டப்பட்டவை என்னும் கருத்துடையதே ஆங்கிலத்திலுள்ள Inscription என்னும் சொல்.

திருவனந்தபுரம் அரசர் கல்லூரி நூல் நிலையத்தி லிருந்து நான் வாங்கிப் படித்த ஒரு நூலில், கல்லில் வெட்டியுள்ள

எழுத்துக்களை வெட்டெழுத் தென்றே தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

இக் கருத்துக்களைப் புலவர்கள் ஆராய்க!

இக் கருத்திற் கேற்க, 1951 ஆம் ஆண்டு, ஜனவரி திங்களில் வெளிவந்த 'The National Geographical Magazine' என்னும் பல்கலைத் திரட்டில், கி.மு. 20 ஆம் நூற்றுண்டில் பண்டை மெசபொடேமியாவில் நாகரிகம் எத்தன்மையாய் இருந்திருக்கலாம் என்று, தக்க சான்றுகளுடன், வெளிவந்துளது. இத்திரட்டின் 79 ஆம் பக்கத்தில் திருமணம் நடக்கும் ஓவியம் ஒன்றுள்ளது. இதில் மணமகளின் தந்தை அருவிலை பெற்று (பரிசப் பணம் பெற்று) தன் மகளை மணமகனுக்குக் கொடுத்ததாக ஒரு முறி முத்திரையிட்டுக் கொடுக்கப்படுகிறது. இம்முத்திரை களிமண்ணுல் செய்யப்பட்டது. அம் முத்திரை குழவி வடிவு உள்ளது. இக்குழவியை ஒரு களிமண் தட்டில் அழுத்தி உருட்டுகிறான். மணமகளின் தந்தை இப்படி உருட்டுவதால் தன் முத்திரை அத்தட்டில் அழுந்தி அக்கால எழுத்துக்களும், அவனுடைய குறியும் நன்றாய்த் தெரிகிறது. எனவே, அம் முத்திரையில் உள்ள எழுத்துக்களும் வடிவுகளும் எழும்பியிருந்தால் (Raised) அம்முத்திரை களிமண் தட்டில் பதியும். அல்லது அம் முத்திரையிலுள்ள எழுத்துக்களும் வடிவுகளும் வெட்டப் பட்டிருந்தால் (Insribed) களிமண் தட்டில் உள்ளன மேடிட்டிருக்கும். இவ்விரண்டு முறைகளில் எதுவானுலும் குழவியில் உள்ளன இடம் வலமாக மாறி யிருக்க வேண்டும். (எழுத்துக்களும் சரி, வடிவுகளும் சரி) இவ்வாறு முத்திரையை அமைப்பதானுல், வடிவுகளையும், எழுத்துக்களையும் தனித்தனியாகச் செய்து அவைகளை இடம் வலமாகக் குழவியில் ஒட்டிச் சுட்டெடுத்து வைத்துக் கொள்வது எளிதா? அல்லது, அவ் வடிவுகளையும், எழுத்துக்களையும் இடம் வலமாகக் குழவியில் வெட்டி சுட்டு வைத்துக் கொள்வது எளிதா? (இவ்வாறு இடம் வலமாக மாறி அமைத்ததே காரணம் போலும் பெர்சியா எழுத்துக்கள் தற்காலத்தில் இடம் வலமாக அமைந்துள்ளதற்கு). முதலில் கூறிய முறையானுல் எழுத்துக்களும், வடிவுகளும் மேடிட்டிருந்திருக்க வேண்டும். பின் கூறியதானுல் களிமண் தட்டில் உள்ள எழுத்துக்களும், வடிவுகளும் மேடிட்டிருக்க வேண்டும். இவ்வாருக எழுத்துக்களும் வடிவுகளும் எழுந்திருந்ததனுலேயே தமிழ் நாட்டில் மிகப் பண்டைக் காலத்தில் தோன்றிய குறி வடிவுகளை எழுத்து என்றனர் போலும்.

யாழும் வீணையும்.

திருமந்திரமணி, துடிசைகிழார், அ. சிதம்பரனுர்.

(முற்றொடர்ச்சி : துணர் உசு, மலர் ௰க, பக்கம் 344)

(f) நிகண்டும் அகராதியும்

(1) 'தந்தி, வீணை, கின்னரம், கோட்டம், கோடவதி, விவஞ்சி யாழ்ப் பெயர் கூறும்.'

(பிங்கலந்தை, பக்கம் 176)

(2) 'வீணை கின்னரம் தண்டு மாகும்' (௸)

(3) 'அறிகலமும் கருவியும் அப்பெயர்க் குரித்தே'

(௸)

(4) மிதுன விராசியும், வீணைக் கருவியும்
அசுபதி நாளும், யாழெனலாகும் } (பிங்கலந்தை) பக்கம் 406,

யாழ்ப்பாண அகராதி

(5) யாழ்=அசுபதி, ஆந்தை, திருவாதிரை, நீர்ச்சுழித் திரை, மிதுனம், (இராசி). வீணை (பக்கம் 604)

(6) வீணை=ஓசையாழ், கலை ஞானம் அறுபத்து நான்கில் ஒன்று, மின்னல் (பக்கம் 659)

இவைகளால் நாம் என்ன அறிகிறோம். கொஞ்சம் கூர்ந்து நோக்கினல் தான் ஆன்றோர் கருத்துக்கள் வெளியாகும். கூர்த்த அறிவு இன்றேல் உண்மை வெளிப்படாது. யாழுக்கு வீணை என்ற பெயர் தமிழ் மொழி ஆரம்பத்திலிருந்தே உண்டு என்பது நிகண்டாலும் அகரராதியாலும் அறியக் கிடக்கின்றது. ஆனால், அந்த அகராதியிலும் நிகண்டிலும் 'வீணைக் கருவி யாழெனலாகும்' என்று கூறியுள்ளதையும், வீணை=ஓசையாழ் என்று கூறியுள்ளதையும் கவனித்தால், யாழ்—வீணை என்ற சொற்களை உபயோகப்படுத்தும் மரபு விளங்கும்.

பிங்கல முனிவர் யாழ்=வீணை என்று 176ஆம் பக்கத்தில் கூறியவர், அதே பக்கத்தில் யாழ்=கருவி என்றும், 406ஆம் பக்கத்தில் யாழ்=வீணைக் கருவி என்றும், கூறியுள்ளமை காண்க. 176ஆம் பக்கத்தில் வீணை=தண்டு என்கிறார். இங்கே தண்டு என்பது உடம்பின்கண் உள்ள வீணைத்தண்டு (முதுகெலும்பு)

ஆகும். ஆதலின், யாழ் ஆகிய இசைக் கருவியும், மிடறுகிய வீணையும் சேர்ந்தது தான் வீணை என்பது என்று அம்முனிவரும் ஒப்பினது என்று தெளிவாகிறது. வீணை—ஓசையாழ்; அதாவது, மிடற்று ஓசையும் யாழ் ஒலியும் சேர்ந்தது வீணை என்று பொருளாகின்றது. இதுவே அகராதிக்காரர்களும் நிகண்டு ஆசிரியர்களும் கண்ட முடிபு.

(g) ஓசை—ஒலி

இனி, ஓசை என்பது மிடற்றில் உண்டாவது. அதாவது உயிருள்ள மனித உடம்பில் உள்ள மிடற்றிலிருந்து உண்டாவது, பொருள் உள்ளது.

ஒலி என்பது உயிரில்லாத இரண்டு பொருள்கள் சேரும் போது உண்டாவது. ஒலி இயற்கையானது. பொருள் இல்லாதது.

ஓசை வேறு, ஒலி வேறு என்பது முத் தமிழ் வல்லார்க்கு ஒப்ப முடிந்தது ஒன்றும்.

எந்தப் பொருளைத் தட்டினாலும், இருகைகளைக் கொட்டினாலும் ஒலி உண்டாகும். அந்த ஒலி ஓசை அல்ல. ஒலி பொருள் இல்லாதது. ஓசை பொருள் பொதிந்தது. இதனை உட்கொண்டே நம் தாண்டக வேந்து, "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று இறைவனைப் பார்த்துக் கூறுகிறார். வெற்றுரை ஒலியைச் செய்யும். பொருள் உரை ஓசை கொடுக்கும்.

பருந்தும் நிழலும் போல, சொல்லும் பொருளும் சேர்ந்தது தான் ஓசை. பொருள் இல்லாதது ஒலியாகும்.

திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு சிவபெருமான் தாளக் கருவி கொடுத்தார். அந்தத் தாளத்தைத் தட்டினால் ஒலி உண்டாகும். அது இயற்கை. எந்த உயிரில்லாத இரண்டு பொருள்களைச் சேர்த்துத் தட்டினாலும் ஒலி உண்டாகும் என்பது விஞ்ஞான அறிவு வாய்ந்தவர்களுக்கு ஒப்பமுடிந்தது ஆகும். ஆனால், சாதாரண ஒலியை உண்டாக்கும் தாளக் கருவியை சிவபெருமான் கொடுக்க வேண்டுமா? கடைகளில் வாங்கிக் கொள்ளலாமே? தாளக் கருவியைக் கொடுத்ததோடு விட்டு விட்டால் தனக்குப் பெருமை இல்லை என்று நினைத்து, தம்முடைய சத்தியைப் பார்த்து அத்தாளத்துக்கு ஓசை கொடுக்கச் செய்தார். தாளத்துக்கு ஓசை கொடுத்த, திருக் கோலக்காவில் உள்ள அம்மைக்கு "ஓசை கொடுத்த நாயகி" என்று பெயர். இது எதனைக் குறிக்கின்றது? சீகாழியில் திருமுலைப்பால் உட்கொண்ட ஞான்றே, திருஞான சம்பந்தர்

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந் நிலையில்.'

என்றபடி ஞானங்கள் அவ்வளவும் கைவரப் பெற்றார். திருக்கோலக்காவில் அம்மையின் அருளால் இசைக் கருவியின் ஒலிக்குப் பொருள் தரும் ஓசையைக் கொடுக்கும் உணர்வைப் பெற்றார் என்பது தெரிகிறது.

கஞ்சக் கருவியாகிய தாளத்தின் ஒலியூடே, தேவாரப் பாக்களின் பொருளை வெளிப்படுத்தும் முறையை அம்மையார் சுவாமிகளுக்கு உணர்த்தி அருளினார் என்பதே திருஞான சம்பந்த சுவாமிகளுடைய சரித்திரத்தால் நாம் தெரிந்து கொள்ளுவது ஆகும்.

தஞ்சாவூர் நாராயணசாமி அப்பாவின் தண்ணுமை (மிருதங்கம்) ஓசையையும், திருக்கோடிகா கிருஷ்ணையருடைய கின்னர (பிடில்) ஓசையையும், சரப சாஸ்திரிகளுடைய வேய்ங்குழல் ஓசையையும், செம்பொனார் கோவில் இராமசாமி பிள்ளையின் நாதசுர ஓசையையும், மைசூர் சமஸ்தான வித்வான் சேஷண்ணா,வின் வீணை (யாழ் ஓசை) ஓசையையும் சிறு வயதில் நான் கேட்கும்படியான பேறு பெற்றேன். அவர்கள் எல்லாம் மேற்கண்ட கருவிகளை வாசிக்கும் போது பார்த்தால் தாங்கள் பாடும் பாட்டுக்களின் பொருள்களை உணர்ந்து, அவ் வுணர்ச்சிகளைக் கருவிகளுக்கு கை விரல்களின் வழியாய் ஊட்டுவது போலிருக்கும். வாசிப்போருடைய மிடறுஇய வீணையின் ஓசை சேரா விட்டால் இசைக் கருவிகளுக்கு ஓசை உண்டாகாது, அம் மாதிரி வாசிப்பவர் இக் காலத்திலும் இரண்டொருவர் உளர். கருவியை வாசிப்பவன் தன்னுடைய மிடற்றால், தன்னுடைய உணர்ச்சியைப் புகட்டி, பாட்டின் பொருளைப் பிறர் செவியில் புகும்படி வாசிப்பானே யாகில் இசைக் கருவிகளுக்கு இனிய ஓசை உண்டாகும். அப்படிச் செய்யாவிட்டால் அக் கருவிகள் எல்லாம் ஒலியையே பெருக்கும். திரு விழாக் காலத்தில் திரண்ட மக்களுடைய கூட்டத்தில், தண்ணுமை, குழல், யாழ் முதலிய கருவிகளை வாசிப்பவரும். நாட்டியம் செய்பவரும், தோத்திரம் செய்பவரும், சாமான்களை விற்பவரும் வாங்குபவரும் எல்லோரும் ஒலி செய்வதைப் பார்க்கிறோம். அங்கே இசைக் கருவிகளில் வாசிக்கப்படும் பாட்டின் பொருளை அறிந்து அநுபவிக்கமுடியுமா? முடியாது, அத் தகைய சமயத்தை நம் சேந்தனார் 'குழலொலி, யாழொலி, கூத் தொலி, ஏத் தொலி எங்கும் குழாம் பெருகி, விழ வொலி விண்ணளவுஞ் சென்று விம்மு மிகு திருவாரூரின்'

என்று வான முகட்டைப் பிளக்கும் கூப்பாடு, வெற்றொலி என்றாரே ஒழிய, குழல் ஓசை, யாழோசை, என்று கூறினார் இல்லை.

ஆதலின், ஆன்றோர்கள் ஓசைக்கும் ஒலிக்கும் உள்ள வேற்றுமையினை உணர்ந்து, தமிழ் மரபு கெடாதபடி தகுந்த இடங்களில் பயன் படுத்தி உள்ளார்கள் என்பது தெளிவாம்.

இறைவனுடைய புகழாகிய பொருள் பொதிந்த பாக்களை மிடற்றால் பாடி, யாழோடு இசைத்தால் தான் யாழ் ஒலி யாழ் ஓசையாக மாறும். அப்போது தான் அதனைக் கேட்ட மரம் உருகும், மண் உருகும், மலையும் உருகும்.

இக் காலத்திற் கூட கச்சேரிகளில் பாடகர் இராகம் பல்லவி பாடி, இடையில் தாள வாத்தியங்களுக்கு ஒரு ஆவர்த்தம் கொடுத்து, முடிக்கும் போது பல்லவியின் கடைசி அடியை பாடகர் சேர்ந்து பாடி முடிக்கும் போது ஒவ்வொருவர்க்கும் உண்டாகும் ஆனந்தம் அநுபவித்தவர் அறிவர். இதனால் என்ன தெரிகிற தென்றால் தாள வாத்திய ஒலிகளோடு மிடறு சேர்ந்தால் ஓசை இன்பம் மிகுதிப்படுகிறது என்பது சொல்லாமலே விளங்கும். அதனாலே தான் வீணைக்கு ஓசையாழ் என்ற பெயரைக் கொடுத்துள்ளார்கள். அத் தகைய பொருள் பொதிந்த பெயரை அகராதியிலும் எழுதி வைத்தார்கள். இசை ஆசிரியர்களும் இசை மாணவர்களும் இந்த நுணுக்கங்களை உணர்ந்து ஒழுக வேண்டும். இந்த மாதிரி நுணுக்கங்கள் பல கொண்ட நூலே 'இசை நுணுக்கம்' என்னப்படும். பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அய்யர் B. A., B. L., அவர்களும் தமிழ் இசை மலர் 5. பக்கம் 6-ல், 'சங்கீதத்தைப் பாடவும் வேண்டும் இசைக் கருவிகளை வாசிக்கவும் வேண்டும். அப்பொழுது தான் உண்மையான சுவை அநுபவம் நமக்கு உண்டாகும்' என்கிறார். ஆதலால், தற்காலப் புலவர்களும் இசைக் கருவியுடன் மிடறும் சேர்ந்தால் தான் ஓசை இன்பம் உண்டு என்பதை அறிந்துள்ளார்கள்.

(h) எடுத்துக் காட்டுக்கள்

இதற்குத் தமிழ் இலக்கியங்களில் ஆதாரங்கள் பல உண்டு. எடுத்துக் காட்டாக ஈங்கு இரண்டொன்று கூறுகின்றேன் :—

(கொங்கு மலர் I. பக்கம் 106)

'சிலப்பதிகாரத்தில் மாதவியும் கோவலனும், திருவிளையாடற் புராணத்தில் பாண பத்திரனும் அவனுடைய மனைவியும் யாழாலும் மிடறாகிய சாரீர வீணையாலும் பாடினர் என உணர்கிறோம்.

இருவகைக் கருவிகளாலும் (யாழ்—மிடறு) பாடுதற்குரிய விதிகள் இசை நூற்களில் காணப்படுகின்றன. இசை இலக்கணங்களிலும் உண்டு.

(i) யாழ் வாசிக்கும் முறை.

“ நல்லிசை மடந்தை நல்எழில் காட்டி,
அல்லியம் பங்கயத்து அயன் இனிது படைத்த
தெய்வம் சான்ற தீஞ்சுவை நல்லியாழ்
மெய்பெற வணங்கி இடவயின் இரீஇ
மருவிய வினயம் மாட்டுதல் கடனே ”

(இசை நூற் சூத்திரம்)

சிலப்பதிகாரம் வேனிற் காதையில் மாதவி யாழ் வாசித்த போது, பதுமாசனத் திருந்து, பாடினாள் என்பதாலும்,

“ முந்தி எழிடம் தழீஇக்
குரல்வழி முகிழ் விரல் போய் உந்தவே ”

என்னும் திருவிளையாடற் புராண வாக்காலும், பதுமாசனத்தில் இருந்து, இடது பக்கம் தழீஇ இருந்து, குரல் காட்டி, அவ் வழி விரல்களினால் நரம்புகளை இசைத்தல் வேண்டும் என்று தெரிகிறது. யாழ் வாசிக்கத் தொடங்கும் முன், செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு, என்னும் ஒலிக் குற்றங்கள் உண்டாகாதபடி யாழைச் சோதித்துப் பார்த்தே வாசிக்க ஆரம்பிக்க வேண்டும்.

மிடற்றால் பாடும் போது இக் காலத்துச் சில பாடகர்களைப் போல, அளவு கடந்து சிரத்தை ஆட்டலும், கரத்தை நீட்டலும், கண்ணை இறுக மூடிக் கொள்ளுதலும, பல்லைக் காட்டலும், அழு முகம் காட்டலும், கழுத்தை வீங்கச் செய்தலும், வயிறு குழையச் செய்தலும், பேய் ஆடினாற் போல உடல் சுழன்று ஆடலும் முதலியவை கூடா. இதனை :—

“ கண்ணிமையா, கண்டம் துடியா, கொடிறசையா,
பண்ணளவும் வாய்தோன்றா பற்றெரியா—எண்ணிலிவை
கன்னார் ஈறும் தெரியற் கைதவனே ! கந்தருவர்
உன்னாளப் பாடல் உணர் ” (இசை மரபு)

என்ற செய்யுளால் அறியலாம்.

“ வயிறது குழியவாங்கல். அழு முகங் காட்டல், வாங்கும்
செயிரறு புருவம் ஏறல், சிரம் நடுக் குறல், கண் ஆடல்,
பயிரறு மிடறு வீங்கல், பையென வாயங் காத்தல்,
எயிறது காட்டல், இன்ன உடற் றெழில் குற்றம் என்ப ”

"வெள்ளை, காகுளி, கீழோசை, வெடிகுரல், நாசி இன்ன
என்னிய எழாலின் குற்றம் எறிந்து நின்று இரட்டல், எல்லை
தன்னிய கழி நோக்கு, ஓசை இழத்தல் நெட்டுயிர்ப்புத் தள்ளித்
துள்ளல் என்றின்னன பாடற் றொழிற் குற்றம் பிறவும்
[தீர்த்தே."
(திருவிளையாடற் புராணம்)

என்ற செய்யுட்களில் கூறப்பட்டுள்ள குற்றங்கள் இல்லாமல் சாரீரமானது யாழுடன் இசைந்து ஒலிக்க வேண்டு மென்பது பெறப்பட்டது.

இனிச் சிந்தாமணியில் திருத்தக்க தேவர்:—

காந்தருவதத்தை யாழ் வாசித்தது என்ற தலைப்பில்,

"கருங்கொடிப் புருவம் ஏறா கயல் நெடுங் கண்ணு மாடா,
அருங்கடி மிடறும் விம்மா(து), அணிமணி எயிறும் தோன்றா.
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்து இவள் பாடினாளோ?
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ? என்று நைந்தார்.

என்று தெளிவாகக் கூறியுள்ளார். இங்கே, யாழும், மிடறும் சேர்ந்து ஒலிக்கும் ஓசையினை 'வீணை நாவின் நவின்றதோ?" என்று வீணை என்ற சொல்லைப் பயன் படுத்தி யுள்ளார். காந்தருவ தத்தை வாசித்தது யாழ் தான். ஆனால், மிடறு சேர்ந்ததால் வீணை ஆயிற்று என்ற தமிழ் இலக்கிய மரபைச் சுட்டிக் காட்டுகிறார்.

பார்க்கிறவர்களுக்கு (audience) யாழ் வாசிப்பதும், மிடற்றால் பாடுவதும் வேற்றுமை தெரியக் கூடாது. இரண்டு ஒலிகளும் இயைந்து, அத்துவிதமான போது தான் ஓசை இன்பம் உண்டாகிறது. அதனைத் தான் வீணை வாசித்தல் என்பது.

இந்த மாதிரி இசைக் கருவியின் ஒலியும், மிடற்று ஒலியும் அத்துவிதமாகும்படி வாசிப்பதே சிறந்த இசைப் புலவர்களுக்குப் பெருமை கொடுப்பது.

இது காறும் யாழே வீணை என்று சொல்லுபவர்களுடைய கொள்கைகளைப் பற்றி இலக்கியம், அறிவு, அநுபவங்கட்குத் தக எடுத்து விளக்கினோம்.

இனி யாழ் வேறு, வீணை வேறு என்று கூறுபவர்களுடைய கொள்கைகளைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

II. யாழ் வேறு—வீணை வேறு

யாழ் வேறு, வீணை வேறு என்பார் தங்களுடைய கூற்றுக்குச் சான்றாக :—

'குழலும், வீணையும், யாழு மென்றினையன குழைய'

என்ற கம்பர் வாக்கையும் ;

'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்.
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்'

என்ற மாணிக்கவாசகர் வாக்கையும் காட்டுவர். இவைகளைத் தவிர இது வரை அவர்கள் வேறு ஆதாரங் காட்டவில்லை.

இங்கே, மாணிக்கவாசகர் வீணையர் ஒரு பக்கம், யாழினர் ஒரு பக்கம் தனித் தனியாக இருந்து சிவபெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடினர் என்று பிரித்துக் கூறியிருக்கிறபடியாலும், 'வீணையும் யாழும்' என்று கம்பரும் ஒரே வரியில் தனித் தனி கூறியிருக்கிறபடியாலும் யாழ் வேறு, வீணை வேறு என்று அறியத் தக்கது என்பர்.

இன்னொரு புலவர் சித்தாந்தம் மலர் 23. இதழ் 7. பக்கம் 289-ல் அடியில் வருமாறு கூறுகிறார் :—

'வெகு காலம் வரைக்கும் வீணை என்பதும், யாழ் என்பதும் ஒன்றே என்று புலவர்கள் எண்ணி இருந்தார்கள். அப்படியாயின், ஒரே அடியில் இரண்டையும் தனித் தனியாக ஒரு பண்டைக் கவிஞர் கூறுவாரா? என்ற கேள்வி எவருடைய மூளையிலும் எழும்பவில்லை. வீணை என்பது வடநாட்டு இசைக் கருவி. யாழ் என்பது தென்னாட்டு இசைக் கருவி. சொற்களே அவ் வேறு பாட்டை எடுத்து உரைக்கும். அதை உட்கொண்டு போலும் திருவாத வூர் அடிகள், 'இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்' என்றனர். இருக்கு என்ற வேத மொழிகளும், தோத்திரம் என்ற அன்புப் பாடல்களும் வேறு. அது போலவே வீணை என்ற வடநாட்டு நரப்புக் கருவியும், யாழ் என்ற தென்னாட்டு நரப்புக் கருவியும் வேறு. அவ் விரண்டை இரு வேறு இசை வல்லோர்கள் பாடினார்கள் என்று மாணிக்க வாசகர் வெகு தெளிவாக உணர்த்துகிறார் அல்லவா? சிறந்த இவ் விரு வேறு இசைக் கருவிகளையும் சில கல் வெட்டுக்கள் கூறுகின்றன :—

I கல் வெட்டு

திருந்து தேவன் குடி என்ற தலத்தில் உள்ள அரு மருந்துடையார் கோயிலில் (தற்போது கர்க்கடேசுரர்) உள்ள கல்

வெட்டு ஒன்றின் படி அவ்வூர்க் கோவிலில் இறைவன் முன்னிலையில் வழிபாட்டின் போது வீணை வாசிப்பதற்கு விக்கி விநாயகன் திருச்சிற்றம்பல மூடையான் என்ற ஒரு வீணைப் புலவனுக்கு பரம்பரையாக ஒரு நிலம் வீணைக்காணி யாகக் கொடுக்கப்பட்டது, என்று கண்டிருக்கிறது. வீணை வாசிப்பதற்குத் தானம் செய்த நிலம் வீணைக் காணி என்று சொல்லப் படும் (47/1910). இது நடந்தது விக்கிரமச் சோழன் 6-ஆம் ஆண்டிலே, அதாவது, கி. பி. 1124-இல் என்க. திருந்து தேவன் குடி வேப்பத்தூருக்கு அருகில் உள்ளது. தஞ்சையில் கும்ப கோணம் தாலுகாவில் உள்ள ஒரு பாடல் பெற்ற தலம். மற்றும் வீணை என்ற கருவி இராசராசன் I காலத்திலேயே மிகப் பிரசித்தியாகப் போற்றப்பட்டு வந்தது என்று ஒரு குறிப்பும் உண்டு (கல் வெட்டு அறிக்கை பக்கம் 19 (1899—1900).

II கல் வெட்டு

இனிக் கொங்கு நாட்டில் யாழ் வாசிப்பவர்கள் இருந்தார்கள் என்று கொங்குச் சோழன் விக்கிரமன் காலத்துக் கல் வெட்டு ஒன்று கூறுகிறது. (13-ஆம் நூ-நடுப்பகுதி). விக்கிரமன் (22+1).

கொங்கு நாட்டுப் பொங்கலூர் நாட்டில் உள்ள ஒரு நிலத்தைக் கரை வழி நாட்டுக் கொழுமம் வீரசோழீசுரம் உடையார் கோவிலுக்குப் பாண்டியன் விக்கிரம சோழ இருங் கோளன் என்பவன் தானம் செய்தான் (147—1909) என்று கூறப் பட்டுள்ளது. மேலும், அந்த இருங் கோளன் யாழ் வாசிப்பதில் நிபுணன் என்று அக் கொழுமம் கல் வெட்டுக் கூறுகிறது.

"ஆகவே, சோழ நாட்டில் வீணை வாசிப்பவர் ஒருவன் இருக்க, கொங்கு நாட்டில் யாழில் வல்லவர் ஒருவர் இருந்தார் என்றும், வீணை வல்லவர் நில தானம் பெற்றவர் என்றும், யாழ் வல்லவர் நிலத்தைக் கோவிலுக்குத் தானம் செய்தவர் என்றும் அறிந்தாம்"

என்று இக் கல்வெட்டுக்களைக் காட்டி யாழ் வேறு வீணை வேறு என்று கூறுகிறார்.

மாணிக்கவாசகர் என்ன கருத்தில் அப்படி வேறு பிரித்துப் பாடி யுள்ளார் என்பது நோக்கத் தக்கது.

வீணையர் என்ற சொல்லுக்கு 'இன்னிசை என்ற அடைமொழி கொடுத்துள்ளார், யாழினர் என்ற சொல்லுக்கு அடைமொழி இல்லை. ஆதலின், அவருடைய கருத்து என்ன?

மிடற்றால் இனிய பாக்களை இசையால் இசைத்து, இன்னிசையோடு யாழை வாசிக்கும் வீணையர் ஒரு பக்கமும், மிடற்றால் பாடாது யாழ்க் கருவியை மாத்திரம் வாசிக்கும் யாழினர் ஒரு பக்கமும் இருந்து சிவ பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சிப் பணியைச் செய்தார்கள் என்று பொருள் கொண்டால் அவருடைய கருத்து வெளியாகும். மாணிக்க வாசகர் யாழ்—வீணை என்ற சொற்களைத் தமிழ் மரபு கெடாதபடி பயன் படுத்தி யுள்ளார் என்பது தெரிகின்றது. கம்பரும் அப்படியே. இதனை விட்டு வேறு விதமாகப் பொருள் கொள்ளுவது பொருந்தாது.

சித்தாந்தப் பத்திரிகை மலர் 23. இதழ் 7. பக்கம் 289—ல் யாழ் வேறு, வீணை வேறு என்று கூற வந்தவர் தம்முடைய ஆராய்ச்சியை ஆதாரங்களுடன் காட்டி எழுதி விட்டுப் போயிருக்கலாம். அதனை விட்டு முன் ஆராய்ச்சிக்காரருக்கு 'மூளையில்லை' என்று கூறுவது கூடாது. இவருடைய ஆராய்ச்சியே முடிந்த முடிபானது என்று இவர் கொண்ட ஆணவம் தான் அப்படி அவரை எழுத வைத்தது. ஆராய்ச்சிக்கு முடிபு இல்லை. இன்றைய ஆராய்ச்சி நாளைக்கு மறுக்கப்படலாம். ஆதலால், அவரவர் ஆராய்ந்து கண்டதை, காய்தல் உவத்தல் இன்றி வெளியிடுவது தான் நல்லது.

சித்தாந்தத்தில் வந்துள்ள கட்டுரையை ஒவ்வொருவரும் கூர்ந்து கவனிக்கவும். வீணை என்ற சொல் வடசொல் என்றும், வீணை வடநாட்டுக் கருவி யென்றும் இவர் கொண்ட தப்பு எண்ணமே இவரை அவ்வாறு எழுத வைத்தது. வீணை—வடசொல் என்பதற்கு வேர் (Root) என்ன வென்று வடமொழி நிகண்டு, அகராதிகளில் இருந்து காட்டினாரா? இல்லையே! அல்லது, வடநாட்டுக் கருவி யென்று இவர் சொல்லுகிற வீணைக்கும், தென்னாட்டுக் கருவி என்று இவர் சொல்லுகிற யாழுக்கும் உறுப்புக்களில் இன்ன வேற்றுமை, அமைப்பில் இன்ன வேற்றுமை. உண்டாக்கும் நாதத்தில் இன்ன வேற்றுமை என்று காட்டினாரா? இல்லையே! அப்படி இருக்க யாழ் வேறு வீணை வேறு என்றால் வேறு தான் என்றால், அது ஆராய்ச்சி அன்று; அது பிடிவாதம். இவர் காட்டிய கல்வெட்டுக்களில் யாழ் வேறு வீணை வேறு என்று எங்கே குறிக்கப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் வீணை வாசிப்பவன் நிலத் தானம் பெற்றான் என்றும், இன்னொரு கல்வெட்டில் யாழ் வாசிப்பவன் கோவிலுக்கு நிலத்தைத் தானம் செய்தான் என்றும் கூறப்பட்டிருக்கிறதே யொழிய, யாழ் வேறு வீணை வேறு என்று எங்கே கூறப்பட்டுள்ளது?

இன்னென்று, இவர் 'இருக்கொடு தோத்திரம்' என்பதற்கு, இருக்கு வடமொழி வேதம் என்றும், தோத்திரம் தமிழ்ப் பாடல் என்றும் உரை கூறுகிருர். அப்படி கூறுவதற்குப் பாடலில் இடம் இல்லையே?

மாணிக்க வாசகர் வீணையர் ஒரு பால் என்றும், யாழினர் ஒரு பால் என்றும் இரு கூட்டத்தாரைக் குறித்த மாதிரி, 'இருக்கினர் ஒரு பால் தோத்திரர் ஒரு பால்' என்ற கூறவில்லையே! 'இருக்கொடு தோத்திரம்' என்ற ஒரே கூட்டத்தாரைப் பற்றித் தான் கூறியுள்ளார். இதில் வடமொழி வேதக் கூட்டத்தாரையும் தமிழ் மொழித் தோத்திரக் கூட்டத்தாரையும் கூறுவதற்கு இடம் எங்கே? இக் கட்டுரையாளர் 'இருக்கொடு' என்ற சொல்லில் உள்ள 'ஒடு' என்ற உருபை மறந்து பேசுகிருர். இருக்கு என்ற சொல்லுக்கு 'பாட்டு' என்பது பொருள். வட மொழி வேதம் என்ற பொருள் இல்லை. 'இருக்கொடு தோத்திரம்' என்ருல் பாட்டு உருவமாகவுள்ள தோத்திரப் பாடல்கள் என்று பொருள். ஆகையால், ஒரே கூட்டத்தாரைப் பற்றி மாணிக்க வாசகர் கூறியிருக்க, மாறுபட்ட பொருள் கொண்டு தம்முடைய கொள்கைக்குச் சான்ருக எடுத்துக் கொண்டார். ஆதலின், அவர் கூறும் கூற்று வலி பெருது என விடுக்க. இவ்வளவே இத் திறத்தார் கூறும் சான்றுகள். வேறு ஆதாரங்கள் அவர்கள் காட்டக் காணேம்.

(j) முடிபு

வேறு என்று கூறுகிறவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் யாழுக்கும் வீணைக்கும் உறுப்புக்களில் இன்ன வேற்றுமை, அமைப்பில் இன்ன வேற்றுமை, உருவத்தில் இன்ன வேற்றுமை, என்று வேற்றுமை ஒற்றுமைகளை எடுத்துக் காட்டி, இலக்கியச் சான்றுகளும் காட்டுவார்களே ஆனுல், அவர்களுடைய கூற்றை ஒத்துக் கொள்ளுவதில் யாதொரு தடையு மில்லை. அப்படி யில்லாமல் 'வேறு என்ருல் வேறு தான்' என்று பிடிவாதமாக யாதொரு காரணமும் இல்லாமல் கூறுவார்களே யானுல், அது அறிஞர் உலகில் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

'தமிழ்ப் பொழில்' ஆசிரியர் இக் கட்டுரையை தமிழ்ப் பொழிலில் பிரசுரிப்பதுடன், படிகள் எடுத்து தமிழிசைச் சங்கத்தின் தலைவர், அமைச்சர் இன்னும் முத்தமிழ் வல்ல புலவர்களுக்கும் அனுப்பி, அடுத்து வரும் தமிழிசை ஆண்டு விழாவில் இதைப் பற்றி விவாதித்து ஒரு முடிபுக்கு வருமாறு கேட்டுக் கொள்ள வேண்டுகிறேன்.

யாழின் மென்மொழி அம்மை திருவடி வாழ்க.

(முற்றிற்று)

உருவமும் உள்ளொளியும்.

திரு. அ. பழநியப்பன், சென்னை.

ஒளி படைத்த கண்கள், தம் முன் தோன்றும் உருவங்க ளனைத்தையும் படம் பிடிக்கின்றன. அத் தோற்றங்களைப் பகுத் துணர்த்தும் தன்மை அறிவின் பாற் பட்டது. உள்ளத்தே எழும் உணர்ச்சியும் உருவக வொளியுடன் கலந்தால், அதில் மிளிரும் தோற்றம், தனிப் பண்புடையதா யிருக்கும். அப் பண்பு யாவர் மாட்டும் ஒத்ததாக அமையாமை கண்கூடு: அவரவர் தம் உள்ளப் பண்பாட்டிற் கேற்ப, அறிவின் அளவுகோலா யமைவது உள்ளொளி. உள்ளொளி பெற்றிலங்காதார் இரா ரெனி னும், அவ் வொளி வேறுபாட்டினைப் பலவாருக விரிக்க லாம். நிகழ்ந்த வேறுபாட்டினைத் தலையாகக் கொண்டு, அறிவின் ஆழத்தினை அறிய முடியாது. அகத் தோற்றத் தின் அடிப்படையிலே உள்ளொளி பிறப்பதால், அதில் உயர்வு தாழ்வு கற்பிப்பது பொருந்தாது. அகத்தே நிலை பெற் ருெளிரும் பண்பு, புறத்தே சுடர்விட் டொளிரக் கண்ட பின்னர் தான், அவை யனைத்தும் வெவ்வேறு துறைகளிலும் பல்வேறு பகுதிகளாக நின்று, பேரொளி பரப்பிப் பெரும் பயன் விளைவிக்கின்றன வென்று அறிய முடிகிறது.

மலையையும், மலை சார்ந்த பகுதிகளையும் கண்டு களிக்கப் புறப்பட்டனர், அறிஞர் மூவர். அழகிய குன்றைக் குடைந்து குகை யாக்கி, குறிப்பிட்ட சில இடங் களில், உணர்ச்சிப் பெருக்கை விவரிக்கும் பாவங்களுடன் பெரிய சிலைக ளமைத்துச் சித்திரங்களையும் செதுக்கி யிருந் தனர், சிறந்த சிற்பிகள். சிற்பங்களின் உருவங்கள், மூவிரு கண்கட்கும் ஒரே விதமாகவே தோற்றின என்றுலும், மூவர் உள்ளத்தேயும் உருவாகி ஒளிரும் பண்பு ஒத் திலங் காமையால் தோற்ற வேறுபாடுகள் தாமே யமைகின்றன. இஃது இயற்கை நியதியோ டொத்த தென்பது ஆய்ந்தறி வோர்க்குத் தெள்ளிதில் புலனுதல் எளிது.

அழகைக் கண்டு பேரானந்தங் கொள்ளும் உள்ளத்திலிருந்து பிறக்கும் ஒளி கலந்த கண்கட்கு இவ் வுயரிய சிற்பங்களின் தோற்றங்கள் உவப்பிலா உவகை யளிக்கின்றன. "என்னே! மனித ஆற்றலின் மாபெரும் மாட்சி! பரந்து விரிந்த இந் நில வுலகின் கண், என்றென்றும் அழியாது, நிலைத்து நின்று, மனிதனின் ஒப்புயர்வற்ற திறமையின் சின்னமாக விளங்குபவை, இச் சிற்பங்களன்றோ? ஆயிர மாயிரம் ஆண்டுகள் ஓடி மறையினும், நரை திரை மூப்பின்றி, நானிலம் போற்ற நற் சான்று கூறி நிற்பது மாமலைச் சிகரங்கள் என்றுயர்ந் தறிந்தே, மனிதன் தன் சீரிய முயற்சியின் சிறப்பை, அவைகளின் முடியில் பதித்து வைத்தான் போலும்! கலை வளர்ந்த கதை சொல்லும் இச் சிற்பங்களைக் கண்டும், மனிதன் அதன்பால் ஒரு சிறிதும் கருத்துச் செலுத்தினனில்லை! உயிருள்ளவைகட்கு இயல்பாக வமையும் உணர்ச்சிப் பெருக்கினை ஓர்ந்து, உயிரற்ற கற்களில் அப் பாவங்கள் தோன்ற ஆக்கிய திறனை, நினைக்குந் தோறும் பெரும் வியப் பெழுகின்றது. சிற்பி, தனக் கியல்பா யமையும் மன அலைகளைக் கட்டுப் படுத்தி, கற் கோவிலில் அமைக்க விருக்கும் திரு வுருவத்தை தன் மனக் கோவிலில் முதன் முதலாக அழகுற அமைத்துக் கொள்ளுகிறான். கரங்களின் தெளிவுப் பழக்கத்தால், கற்களில் சிறந்த ஓவிய மென வரைந்து கொள்கிறான். பின்னர் தகுந்த ஆயுதங்களின் உதவியால், சூழக் கரைத் தெடுக்க வேண்டிய பகுதிகளைக் கண்ணுங் கருத்துமாகப் பெயர்க்கிறான். உறுப்புக்களை ஒழுங்காகச் செதுக்கி, அகத் தழகை முகத்தில் திகழ, எவ்வாறு முயன்று வெற்றி பெறுகிறான் என்பதைச் சொற்களால் விளக்க இயலுமோ? சிற்பத்தின் அருகிருந்து, சிற்பியின் நுண்ணறிவை உன்னி உணர்வார்க் கன்றி, மற்றோர்க்கு இவை புலனாதல் அரிது! நல்ல உட லமைப்பும், பண்பட்ட உள்ளமும், ஏற்ற உறுதிப் பாடும், நீங்காத பொறுமையும், ஓயாத உழைப்பும், ஒருங்கே வாய்க்கப் பெற்றோரே யல்லால், வேறொருவரால் சிறந்த சிற்பங்களைச் செய்தல் இயலாது. இத்துணைச் சிறப்பும் இன்றியமையாது வேண்டப்படுவது ஏனெனில், பல்லாண்டுகளாக ஓயாது வேலை பார்ப்பதன் காரணமாக, அயர்வு மேலிட்டு, தன்னையு மறியாது, குறிப்பிட்ட இடத்தில் கல்லுளி கொண்டு வலுவாகவோ, அன்றிப் பரப்பாகவோ அடித்து விட்டால், எதிர் பாராத இடத்தில் கரைவு ஏற்

பட்டு விடும்! அதனல் குறிப்பிட்ட பகுதி மட்டிலுமே, வேறுபட்டு நிற்கு மென்று தான் நினைக்கத் தோன்றும். அஃதன்று! அரும் பாடுபட்டு ஆக்கிய சிற்பமே சிதைந்து விடும், என்று நினைக்க நம் மனத்தி லேற்படும் துடிப்பைக் களமாகக் கொண்டு, சிற்பிகளின் மன நிலை எவ்வாறு புண்படும் என்று அகத்திலே உருவகப் படுத்திப் பார்ப் போர்க்கு, குன்றின் மேல் விளக் கெனக் கூறுது புலனுகும்! களிமண்ணினுலோ, மரங்களினுலோ, அல்லது வர்ணங் களினுலோ அமைக்கும் உருவங்களில், குறைவு ஏற்பட் டால், இணைத்தோ, பிணைத்தோ, அல்லது மாற்றியோ நிறைவு செய்து திருத்திக் கொள்ளலாம். கல்லைக் கணக் கின்றிக் கரைத்து விட்டால், எவ்வாற்றுனும் அதனைப் பெருக்க வியலாது. இத்துணை இடர்கட்கும், இடையிலே அரும்பாடுபட்டு ஆக்கிய நம்மனேரின் சீரிய முயற்சியைப் போற்றி, கண் குளிரக் கண்டு, உள்ள முருகி, பலர் அறிய எடுத்துச் சொல்லி மகிழாத மக்கள், மக்களாய்ப் பிறந்தும், பிறவிப் பெரும் பயனைத் தெரிந் தடையாத பேதையர்க ளாகி விடுகின்றனர்.'' என்று நெஞ்சம் நெகிழ்ந்து கூறு கின்ருர், அவ் வறிஞரில் ஒருவர். இவர் இவ் வுருவங்களைக் கலைக்கண் கொண்டு பார்க்கின்ருர், ஆகையால் 'கலைஞர்' என்க!

அறிவு நுட்பத்தின் அழகைக் கண்டு உள்ளத்தே ஒளிரும் பண்புடைய கண்கள், சிற்பச் சிறப்பினைப் பார்த்து அறிவுத் திறனைப் போற்றிப் பூரிக்கின்றன. 'மனிதனின் அறிவுக் கூர்மைதா னென்னே! இயற்கையின் எல்லை யற்ற எழிலைக் கண்டு இன்புற்று, வானளாவ உயர்ந்து நிற்கும் மலைச் சிகரங்களிலே, கல்லைக் குடைந்து தம் கருத் தைப் பதிப்பதிற்ருன், எத்துணை ஈடுபாடிருந்திருக்கிறது நம்மனேர்க்கு' என்று நினைக்க வியப்பாக விருக்கிறது. 'வாழப் பிறந்தோம்' என்பதை மறந்து, தம் குறிக்கோளைத் தலையாகக் கொண்டு, அஃது நிறை வெய்த வாழ்நாளெல் லாம் பெரும் பாடு பட்டுழைத்த தன் பயன் தான், இவ் வரிய சிற்பங்கள் என்றுணரும் போழ்து, மனிதனின் ஈடிணை யற்ற ஆற்றல் தெற்றெனத் தெரிகிற தன்ருே? இன்ப துன்பங்களின் நுகர்ச்சி இயல்பாயமையும் பண் புடைய மக்கள், தம் வாழ்வில், அவைகளை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது புறக்கணித்து, ஒரு பெருஞ் செயல்

புரிய முனைந்தால், அதனால் வரும் பயன் எத் தன்மைத்தா யிருக்கும்; எவ்வாறு நன்மை பயக்கும்; என்பதை நன் காய்ந் தறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாத தாகும். தம் வாழ்வின் திருவுருவா யமைந்த இச் சிற்பங் களினால் மக்கட்கு எத்துணைப் பெரும் பயன் விளைவிக்க முடியு மென்று சிற்பிகள் எண்ணினார்களோ, அறிகிலம்? அறிவுத் திறமையின லமையும் பொருள்கள், கண்கட்கு விருந் தளிப்பனவா யிருந்தால் மட்டும் போற்றிப் புகழவிய லாது; கருத்தைக் கவர்வனவாயும் அமைய வேண்டுவது இன்றியமையாது கருத்தைக் கவர்ந்த பின்னும் களி கொள் வதற்கில்லை, கடுகி வரும் பெரும் பயனை எண்ணுது. பயன், ஒன்றே நினைவாக விருந்தால், செல்வர் சிலரும், கலை வாணர்களும், பொழுது போக்காக சிற்பங்களிருக்கு மிடம் தேடிப் போய்ப் பார்த்து, வேடிக்கையாகப் பேசி மகிழ்வ தைக் குறிக்கலாம். ஆனால் பட்ட பாட்டினாலாய பயன் இம் மட்டென்றால், உழைப்பிற் கேற்ற ஊதிய மில்லை என்று தான் கூறவேண்டும். 'பயன்' என்ற சொல்லிற்கே சிறப்பான பொருள் என்ன வெனில், குறைந்த அளவிற் பாடுபட்டு நிறைந்த அளவிற் பெறுவதே யாம். கிடைத் தற் கரிதாகக் கிடைக்குந் தன் பெரு வாழ்வைத் துறந்து, பல்லாண்டுகளாகப் பணி செய்து, பிறக்கும் பொருளால், மக்கள் பலரும் பயன் பெற்று இனிது வாழ வழிசெய்ய வேண்டும். கற்களைக் குடைந்து தம் கருத்துக்களை அழ காகத் திகழச் செய்த இச் சிற்பிகள் தம் விடா முயற்சியை யும், தெளிந்த அறிவையும், வேறு துறையிற் செலவிட் டிருந்தால் பலரும் பயன் பெறும் செயல் புரிந்து சிறப் படைந்திருக்கலா மன்றோ? அறிவறிந்த நாள் முதலாக ஒரு பொருளைக் குறித்து, அயர்வின்றி ஆய்ந்து, பல்லாண்டு கட்குப் பின்னர் அறிந்து, அப் பொருள் நுட்பத்தை மக்கள் பலரு மறிய விளக்கி, அதனால் பெரும் பயன் பெறச் செயலாற்றியவனும் மனித னன்றோ? மின் னொளி பிறக் கும் இயல்பைத் துருவித் துருவி ஆய்ந்து, தம் வாழ்நாள் முழுமையும் செலவிட்டு அறிந்து, அகிலம் அறிய எடுத்துக் காட்டி, அதனைக் கையாளும் முறையையும் வகுத்துத் தந்து, பலரையும் மகிழ்வித்து என்றென்றும் அழியாத பெரும் புகழைப் பெற்ற பேரறிஞனுடன் ஒப்பிடும் போது, நம்மனோர் திறனும், அறிவும் குறைந்துவிடவில்லை என்று இதய மொலித்தாலும், அடிப்படையில் மாற்ற மில்லையே

என நினைய வருந்த வேண்டியதிருக்கிறது. மக்கட்கு நற் பயன் நல்காத வொன்றை, அரிய கலை என்று அளவளாவிப் பேசி மகிழ்வதால், மனிதன் தன் நினை வாற்றலை இழந்து விடுகிறான்; வெறும் சிறப்புச் செய்வதிலேயே தன் வாழ் நாளைச் செலவிட்டு விடுகிறான்; அறிவின் நுட்பத்தை அறிந்து, அதனுதவியால் அரிய பொருளை ஆய்ந்தறிந்து, மக்கட்குத் தொண்டாற்றி மகிழ்வதினின்றும் சிறந்த கலை வேறொன்றுளதோ? என்று பகுத் தறிந்து கூறுகின்றார், அவ் வறிஞரில் மற்றொருவர். இவர் இவ் வுருவங்களை ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்க்கின்றார், ஆதலால் 'விஞ் ஞானி' என்க!

பிற நலம் பேணும் பண்புடைய உள்ளத்திலிருந்து, ஒளி பெறும் கண்கட்கு, கற்களின் செதுக்கப் பெற்ற உருவங்கள் களிப் பூட்டுவவா யில்லை. 'என்னே! மனித னின் அறியாமை? பல்லாண்டுகளாகப் பாடு பட்டுழைத்து உருவாக்கிய இச் சிற்பங்களினால் நம்மனோர் என்ன பயன் பெற எண்ணினரோ அறியக் கூடவில்லை! அவர்தம் நுண் ணறிவு நல்லொளி பெற்றிருந்தும், நல்வினை யாற்றத் தவறி விட்டனர் போலும்! இவ் வுலகில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, எண்ணத் திடமுமின்றி, வாடி வருந் தும் தம் இனமான மக்கள் கூட்டத்தைக் கண்டு, அதன் துன்ப நிலையை அறிந்தும், ஒரு சிறிதேனும் மன மிரங்கி, அவர்தம் துன்பத்தைத் துடைக்க முனையாத அறிஞன், தான் பெற்ற அறிவினாலாய பயனை யடைய வியலுமோ? மன வுறுதியும், நற் பண்பும், விடா முயற்சியும் ஒருங்கே யமையப் பெற்ற சிற்பிகள், தன் னிகரற்ற திறனை யெலாம் திரட்டி, வெறுங் கற்களைக் குடைந்து, தம் கற்பனை உருவங் களை அதில் பதிப்பதிலேயே வாழ்நாளைச் செலவிட்டுச் சென்றனர். பொன்னான நேரத்தைப் பொருட் படுத்தாது போயினரே, என்று நினைக்குந்தோறும் பெரும் வருத்தத் தினை வருவிக்கிறது. கலையிற் சிறந்தது சிற்பக் கலை என்று சொல்லிக் களிக் கூத்தாடும் அறிஞர்கட்கு வாழ்க்கையும் ஒரு பெருங் கலை தான் என்று ஏனோ தோன்றுவதில்லை? மலையைக் குடையும் நேரத்தில் மக்கள் நலனைப் பேணி, இயன்றவரை உதவி செய்வது இன்பம் பயக்குமன்றோ? மக்கட்குத் தொண்டு செய்யும் மாண்புடையாரெல்லாம், மற்றத் துறைகளில் தம் கருத்தைச் செலுத்தினால், மாண்டு

மடியும் மக்கள் தொகை தான் பெருகி நிற்கும். உயிரற்ற உருவங்களை அழகு படுத்துவதனின்றும் உயிருள்ள மக்கள் வாழ்க்கையை ஒழுங்கு படுத்துவது இன்றியமையாத தாகும் என்பது வெள்ளிடை மலை! உணவின்றி ஒட்டி உலர்ந்து, கந்தைத் துணியுடன் எலும்பும் தோலுமாக களைப்பே உருக்கொண்டு, நடைப் பிணமென ஊர்ந்து வந்து, “ ஐயா ? ஒரு கவளம் சோறு போடுங்கள் ஐயா !” என்று கெஞ்சிக் கேட்கும் ஓர் ஏழையைக் கண்டு, “போடா, போ! எங்கேபோனாலும் இந்தப் பிச்சைக்காரன் தொல்லை தொடர்ந்து வருகிறது.” என்று தன்னருகில் நிற்கும் மற்றொருவரிடம் கூறி அருவருப்புக் கொள்ளும் பெரிய மனிதர், கற்களில் கைதேர்ந்த சிற்பியின் திறமையால் செதுக்கப் பெற்றிருக்கும் ஓர் ஏழைப் பிச்சைக்காரனின் உருவத்தைக் கண்டு, உள்ளம் பூரிக்கிறார். “அடடா! என்ன அருமை! சிற்பியின் திறமையே திறமை! பிச்சைக் காரன் உயிருடன் நின்று பிச்சை கேட்பது போலவே இருக்கிறதே! வறுமையின் தோற்றம் முகத்தில் தெற்றெனத் திகழ்கிறதே! ஓவியம் என்றால் இப்படியன்றோ இருக்க வேண்டும்! என்று வானளாவப் போற்றிப் புகழ்கிறார். இது மக்கட் பண்புதானா? இயற்கையின் உதவியா லியங்கும் மனிதன், தன்னாலியன்றவரை பிறர்க்கு உதவியாயிருந்து, பெரும் பயனடைய, நற் பணியாற்ற வேண்டும், இன்றேல் முறையுடன் வாழ்ந்து, “வாழ்க்கை ஒரு பெருங் கலை ” என்பதை மெய்ப்பிக்க முடியாது !” என்று மனங் கலங்குகிறார் அவ் வறிஞரில் வேறொருவர். இவர் தந்நல மற்ற கண்கொண்டு பார்க்கின்றார், ஆகையால் “பொது நல ஊழியர்” என்க!

உள்ளத்திலே ஒளியுண்டாகி உருவத்துடன் கலந்தால், உயர்ந்த பண்பேற்படுகிறது. அஃது ஒவ்வொருவர் மனத் தேயும் வெவ்வேறு விதமாக அமைகிற தென்பது அறிஞர் தம் கூற்றால் நன்கறியக் கிடக்கிறது. உள்ளத்திலே நல் லொளி யுண்டாயின், உருவத்திலே உயர்ச்சி தோன்றும்! நல்லோர் மனத்தில் உள்ளொளி பெருகும்! உள்ளொளிப் பெருக்கால் உலகம் போற்றப் பேரொளி பரப்பிப் பெரு வாழ்வு வாழ்வோமாக!

ஆங்காங்கே. (5)

திரு. கோ. தியாகராசன், G. M. V. C., தஞ்சை.

ஒரு சொல் பல பொருள் பெற்றதெவ்வாறு?

படி

கற்கால மாந்தனுக்குப் பின் இலக்கியம் தோன்றுவதற்கு முன் வாழ்ந்த தமிழன், தான் உழைத்து அடைந்த கூலங்களாகிய பலன்களை (yield) அளப்பதற்காக மரக்காலைத் (அடிமரத்தை) தோண்டி ஓர் அளவுகலம் செய்து கொண்டான். எனவே, இவ் வளவின் பெயர் 'மரக்கால்'. இம் மரக்காலின் உள் அடியைத் தட்டையாகத் தோண்டி எடுப்பது கடினம். ஆகையால், இது வட்டக்குழியா யிருந்தது. எனவே, புறமும் கோள மேடாக இருந்தது. இன்றும் இப்படியே உள்ளது.

பின் இம் மரக்காலின் உள் அடங்கக் கூடிய ஒரு மரக் கலம் செய்யப் பட்டு, இது முன் செய்யப்பட்ட அளவின் பாதி கூலம் கொள்ளக் கூடியதாகவும், முன் செய்யப்பட்ட மரக் காலினுள் படியக் கூடியதாகவும் இருந்தது. இதுவும் மரக் காலின் வடிவு போன்றதாகவே இருந்திருக்கவேண்டும். (இந்த வடிவுள்ள கால் படி ஒன்று என்னிடம் இருந்தது). இக்கலத்திற்கு படி என்னும் பெயரிடப்பட்டது.

இப் 'படி'யானது மரக்காலினுள் அடங்குவதால் 'உள் அடங்கு' என்னும் பொருளும், அளவைக் குறிப்பதால் படி என்னும் பொருளும் இச்சொல் பெற்றது. (இவ் வளவுகளை ஒன்றனுள் ஒன்றை அடக்கிவைக்கும் முறை கடைகளிலும், வீடுகளிலும் இன்றும் உள்ளது).

அளவு

பழனி மலையின் உச்சிக்கு 300 படிகள் உள்ளன என்றால், அம் மலையின் உயரமும், அதன் உச்சியை அடைவதற்கான உழைப்பும், காலமும் ஒருவாறு விளங்கும்.

உழைப்பின் அளவை இப் படிகள் குறிப்பதால் என்னைப் போன்ற நோயாளிகளும், வயதானவர்களும், 'அடே! அப்பா! என்னால் முடியாது' எனலாம். மற்றொருவர், 'இந்த மலை இவ்வளவு உயரமா! எனக்குத் தெரியாதே' எனலாம்

படிக்கல்

ஒரு குறித்த நிறை அளவு கொண்ட கல் (முற் காலத்தில் கல்லினால் செய்த நிறுத்தல் அளவைகள் இருந்தன போலும்)

படிக்கால்

ஏணி, அதாவது படிகள் உள்ள கால்.

படி Learn.

தமிழின் தாய் வடமொழி யென்னும் பொய்க் கூற்றை நிறுவுவதற்காக, செய்தான்=செய்+தான் எனப் பிரித்து, 'தான்' விகுதி யெனவும், செய்கிறான்=செய்+கிறான் எனப் பிரித்து, 'கிறான்' விகுதி யெனவும் தமிழ் இலக்கணத்தைச் சிதைத் தெழுதியுள்ள வீரசோழியம் படிப்பவன் அறிவு இந் நூலின் அறிவே யாகும். மேலும் இவன் மொழிப் போக்கும் இந் நூலினுள் படிந்தே யிருக்கும்.

ஆனால், தமிழின் பண்பை நன்குணர்ந்து, இது தனி மொழியென விளக்கும் தொல்காப்பியம் படிப்பவன், செய் தான்=செய்+த்+ஆன் எனவும், செய்கிறான்=செய்+கிறு+ ஆன் எனவும் கற்று, இது பகுதி, இது காலம் குறிக்கும் இடை நிலை, இது ஆண்பால் ஒருமை விகுதி என்பதை, உணர்ந்தவனுடைய அறிவு தொல்காப்பியத்தின் உயர்ந்த அளவையும், அந் நூலினுள் அடங்கியு மிருக்கும். எனவே, படி என்னும் சொல் 'கல்' (Learn) என்னும் பொருள் ஏற்றது.

படி Step,

பின் ஒரு உயர் நிலைக்குப் போகப் படிகள் பல உள்ளன வாதலின், முதற் படி, இரண்டாம் படி (First grade & Second grade) எனக் குறிக்கும் அளவின் உயர்வு தாழ்வைக் குறிப்ப தாயிற்று. படி=grade. ஒருவருடைய தகைமைக்கும், செலவின் அளவிற்கும் ஏற்றதாய் கொடுக்கும் செலவு தொகைக்குப் 'படிச் செலவு' என்று (மேற் கூறிய பொருள்கள் ஏற்று) வழங்குகிறது.

படி=அடங்கு

'என் சொற்படி நட' என்பது 'என் சொல்லிற்கு உள் அடங்கி நட' என்று சொல்லுவதே யாகும்.

படி = Impress

சென்ற பிள்ளையார் விழாவின் பொழுது, ஓர் அச்சில் களிமண் உருண்டையை நன்கு படிய வைத்து (உள் அடக்கி) விற்றனர். இவ்வாறு படிய வைத்து உருவம் ஏற்பதால் இதற்கு 'படிவம்' என்று பெயர். (படிவம் செய்யும் பொழுது) களிமண் அச்சினுள் நன்றாய்ப் படியாவிட்டால் மூளியும், மொக்கறையுமாயிருக்கும். (மொக்கு=மொட்டு, மரக்கணு, அதாவது 'முட்டு' = Protuberence). எனவே, 'படி' என்பது ஒன்று போல் ஒன்று என்று பொருள் கொண்டது (படி=Impression). இக் கருத்தில 'படி எடுப்பு' எனனும் சொல்லைப் பயன் படுத்துகிறோம்.

மேற் காட்டியவாறு, 'படி' என்னும் சொல்லை மற்றச் சொற்களோடு புணர்ந்து பயன் படுத்துவதை ஆய்ந்து தெளிக.

சொற் பொருள் விளக்கம்.

'அறை', 'சிறை' என்னும் இரண்டு சொற்களின் முதல் எழுத்துக்கள் வேறு பட்டும், இரண்டாம் எழுத்து ஒன்றாயும் இருக்கிறது. இது போல் இவ் விரண்டு சொற்களிலும் பொதுவாக உள்ள கருத்து, 'அடைப்புள்ளது' அல்லது 'காப்புள்ளது'. ஆனல், வெளி யிருப்பவர் உட் புகாமல் காப்பு உள்ளது 'அறை' உள்ளிருப்பவர் வெளி வாராமல் காப்பு உள்ளது 'சிறை'.

ஒருவர் ஓர் அறையினுள்ளிருந்து உள் தாப்பாள் போட்டுக் கொண்டால், இது வெளி யிருப்பவர் உட் புகாமல் காப்பதற்கே. ஆனல் ஒருவரை உள்ளிட்டு வெளித் தாட்பாளைப் போட்டால், அதுபொழுது அவ் வறை சிறை யாகும்.

இக் காரணங்களினல், அறைக்கு உட் தாட்பாளும், வெளித் தாட்பாளும் உண்டு; சிறைக்கு வெளித் தாட்பாள் மட்டும் உண்டு.

இத்தகைய சிறந்த கருத்துக்களுடைய தமிழ்ச் சொற்களை விடுத்து 'ரூம்' (Room), 'செயில' (Jail) என்னும் பிற மொழிச் சொற்களைப் பயன் படுத்தும் தமிழர்களே! திருந்துங்கள்!

'போ', 'செல்', 'ஏகு'

என்னும் சொற்களின் பொருள் விளக்கம் :—

போ = தன்னிடத்திலிருந்து பிரிவதைக் குறிக்கும்.

'ஆகூழாற் றோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்றும் மடி' (தி. கு. 371)

'ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை' (தி. கு. 478)

மேற் குறித்த முதல் பாட்டில், தன் கையை விட்டுப் போகும் ஊழ் என்றும், இரண்டாம் பாட்டில், தன்னை விட்டுப் பிரியும் வழி என்றும் இச் சொல்லின் பொருள்கள் நன்கு விளக்கப் படுகின்றன.

செல்

யாதாமொன்று சேருவதைக் குறிப்பது.

'செல்லிடத்துக் காப்பான் சினங் காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்' (தி. கு. 301)

'செல்லா இடத்துச் சினந்தீது, செல்லிடத்தும்
இல் அதனின் தீய பிற' (தி. கு. 302)

மேற் காட்டிய குறள்களில் 'செல்' என்னும் சொல் சேருவதைக் குறிக்கிறது என்பது நன்கு விளங்கும்.

மேலும், வழக்கில், 'இந்தக் காசு செல்லாது' (பிறரிடத்தில் சேராது) 'உன் கைவரிசை என்னிடத்தில் செல்லாது' 'அரிசி வாங்கின தொகையை, அரிசிச் செலவு ரூ. 10/– என்று எழுதினால் இந்த ரூ. 10/–ம் எவரிடத்தில் சேர்ந்ததோ அதைக் குறிக்கும்.

ஏகு

இச் சொல்லிற்கு, முன் போ (Advance, proceed) என்னும் பொருள்.

'மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்' (தி. கு. 3)

'ஏகுகின்ற தம் கணங்களோடும் எல்லை காண்கிலா'
(கம்ப. ரா. நகரப் படலம், 15)

ஏகுகின்ற = முன் போகின்ற (Advancing or proceeding)

(11) பொருந்துமா?

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

உலகின்கண் உள்ள பொருள்கள் எல்லாம் கண்ணுக்குத் தெரிவன என்றும், கருத்திற்குத் தெரிவன என்றும் இருவகைப்படும். கருத்திற்குத் தெரிவன மிக நுட்பமானவை. இவற்றைத் திருவள்ளுவர் கண்ணுக்குத் தெரியும் பருப்பொருள் மூலமாக விளக்குஞ் சிறப்பைக் கீழ் வருங் குறள்கள் நமக்குத் தெரிவிக்கும் ஆற்றலுடையன.

(க) ஒருவர் வந்த விருந்ினரை வேறுபட்டு பார்த்த மாத்திரத்தில் வாடுவர்; அனிச்சமலர் கையிலெடுத்து மோப்பக் குழையும்; ஆகையால் அனிச்சமலரினும் மென்மையர் விருந்தினர். என்னும் பொருள்பட,

'மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து' எனவும்,

தூசு, மாசு.

தூசு, புறம் படிந்துள்ளது. எனவே தூசியைத் தட்டி நீக்குகிறோம்.

என் நாற்காலியில் படிந்துள்ள தூசியைப்போல் மெல்லியதாய் புறம் படிந்திருந்த ஆடையை 'சோம குல அந்தகன் சேய் முனர் நடுங்காத் திகைத்தாள் 'தூசு' இடை மாரை தருளும் துளப மார் கழியான்'

(பாகவதம், கபிலப் படலம், 1)

'தூசு' என்னும் ஆகுபெயரால் குறித்தனர்.

மாசு

அகம் படிந்துள்ளது.

'சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசு அற்றார் கோள்' (தி. கு. 311)

இன்னும் சில பாக்களில் இப் பொருள் ஏற்று இச் சொல் திருக்குறளில் உள்ளது.

'மாசிலாமணி' என்னும் பெயர் வழங்குகிறது.

இத் தகைய சிறந்த பண்புள்ள தமிழைப் போற்றுங்கள்.

தமிழ் வாழ்க.

(உ) ஒரு மனிதனிடத்தில் இனிய மொழியும் கடுமொழியும் உள்ளன. அவற்றில் எப்போதும் இனிய மொழியையே யாவரும் விரும்பக் கூறலாமல்லவா? அவ்வாறன்றிக் கடுஞ் சொற் கூறுதலே வழக்கத்திற் காண்கின்றோம். இதனைப் பழங்களும் காயும் மிகுந்துள்ள ஒரு மரத்தில் இனிய பழங்களைவிட்டுத் துவர்ப்புடைய காயைப் பறித்தாற்போல என்று காட்சியளவிலே நன்குவிளங்க,

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' எனவும்,

தெரிய வைத்துள்ளார். இவ்வள்ளுவ ரியற்றிய உட்பகை என்ற பிரிவில் உள்ள) ஒரு குறளை இனி இக்கண்கொண்டு ஆராய்வோம். உட்பகையாவது ஓரிடத்திலேயே வாழ்ந்து உறவாக இருப்பினும் மனத்தில் பகை கொண்டிருப்போராவர்.

முதற் குறளிலே முன்சேர்ந்து இன்பம் பயக்கக்கூடிய நீரும் நிழலும் இருந்தாலும் பின்னர்த் துன்பந் தருவதால் கூடாது எனவும், இரண்டாவது குறளில் உறவுபோல் உள்ள பகைவரைக் கண்டு அஞ்சவேண்டும் எனவும், மூன்றும்குறளில் உட்பகைவரைக் கண்டஞ்சித் தற்காத்தல் இன்றி யமையாதது எனவும், நான்கு ஐந்தாம் குறள்களில் உட்பகையால் பல்வகைத் துன்பங்கள் உண்டாகும் எனவும், ஆறும் குறளில் உட்பகையால் இறக்கவும் நேரிடும் எனவும், ஏழாம் குறளில் உட்பகை யுள்ளவர் கூடியிருந்தாலும் செப்பின் (கிண்ணத்தின்) புணர்ச்சிபோல் மன ஒற்றுமை இராது எனவும், எட்டாம் குறளில் உட்பகை யுள்ளவர் குடியின் ஆற்றல் குறையும் எனவும், ஒன்பதாம் குறளில் சிறு பிளவு இருப்பினும் துன்பம் உண்டாகும் எனவும் தெரிவித்து, பத்தாவது குறளில்

'உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று'.

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை இவ்வாறு இருக்கும் என முடிவாகக் காட்சியளவையிலே உட்பகையை விளக்குகிறார். இக்குறளுக்குப் பரிமேலழகர் உரை வருமாறு:—

'உடம்பாடு இலாதவர் வாழ்க்கை—மனப் பொருத்தமில்லாதாரோடு கூட ஒருவன் வாழும் வாழ்க்கை, குடங்கருள்—குடிலின் கண்ணே, பாம்போடு கூட—பாம்போடு கூட, உறைந்தற்று—உறைந்தாற் போலும். குடங்கம்

என்னும் வடசொற் றிரிந்து நின்றது. இடச் சிறுமை யானும் பாம்பாற் கோட்படல் ஒருதலையாம். ஆகவே அவ்வுவமையால் அவனுயிர்க்கு இறுதி வருதல் ஒருதலை என்பது பெற்றும். இதனாற் கண்ணோடாதவரைக் கடிக என்பது கூறப்பட்டது என்பதாம்'.

இனி,

உடம்பாடு இலாதவர்—மனப் பொருத்த மில்லாதவர், வாழ்க்கை—ஓரிடத்தில் வாழ்தல் (எதுபோல எனின்), குடம்—குடத்தின் கண்ணே, கருள்—கருளன், பாம்போடு—பாம்புடனே, உடன்—ஒருசேர, உறைந்தற்று—தங்கியிருத்தலைப் போலும்.

எனக் கொண்டால் பொருட் சிறப்புண்டு.

இப் பொருளில் 'குடங்கருட், பாம்போ டுடனுறைந் தற்று' என்பதற்குப் பொருட் பொருந்து மாற்றைக் கீழே தரும் மேற் கோள்களைக் கண்டுணர்க.

பாம்பைக் குடத்தில் அடைக்கும் வழக்கம் உண்டு.

(1) 'ஆடிக் குடத் தடையும்...........உற்றிடும் பாம் பெனவே ஓது' என்னும் காளமேகப் புலவர்

பாட்டாலும், 'விரகற்ற குடத்திலே பாம் படைப்போம்' எனத் தத்துவராய சுவாமிகள் பாடுதுறையிற் கூறுவதாலும் தெரிய வரும். 'பாம்புக்குப் பகை கருடன்' என்பதால் கருடன் பகை என்பது விளங்குகின்றது. கருடன் என்பது கருள் என எவ்வாறு வரும்? என்பதே ஈண்டு ஆராயத் தக்கது.

கருடன் என்ற சொல் கருளன் எனப் பல இடங்களிலே எடுத்தாண்டுள்ளார்கள்.

(1) 'கருளக் கொடியோன் காண மாட்டா கழற் சேவடி' என மாணிக்கவாசகரும்,

(2) 'கருளக் கொடி யொன்றுடையீர்' எனத் திருவாய்மொழியிலும்,

(3) 'எண்ணரும் பொருள்படை..........விண்ணுறக் கருளன் மேல் விளங்கும்' எனக் கம்பர் சுந்தரகாண்டம் சூளாமணிப் படலத்தில் கூறுவதாலும்

கருளன் என்றஆட்சி யுண்டு என்பது பெறப்படும்.

கருளன் என்றல்லவா இருக்கவேண்டும் எனின் கூறுதும்.

'குறைச் சொற் கிளவி குறைக்கும் வழி யறிதல்
குறைத்தன வாயினு நிறைப் பெய ரியல'

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலும் செய்யுளிடத்திலே தலைக்குறை, இடைக்குறை, கடைக்குறை என மூவகைப் படும் என்று கூறிக் கடைக் குறைக்கு உதாரணம்,

'நீலுண் டுண்டு கிலிகை கடுப்ப' நீலம் என்ற சொல் நீல் என வரும் எனவும், 'நிறைப் பெயரி யல' எனவே இவ் விகாரம் பெயர்க் கண்ணதே எனவும் இளம் பூரணர் எழுதியிருப்பதால் கருளன் என்ற சொல் கருள் எனச் செய்யுளினிடத்து பெயர்க்கண் கடைக் குறையாய்வந்தது.

உடம்பாடு இல்லாத இருவர் ஓரிடத்தில் வாழ்தல் குடமாகிய ஓரிடத்தில் பகையுள்ள கருளனும் பாம்பும் ஒரு சேர வாழ்ந்தாற் போல எனப் பொருட் பொருத்தமும் உவகைச் சிறப்பும் இருத்தலாலும், வாழ்க்கை உறைந் தற்று என்ற இலக்கண முடிவாலும், கருளன் பாம்போடு உடன் உறைந்தற்று என்றதில் ஒடு என்ற உருபுக்கு உட னிகழ்ச்சிப் பொருள் உண்மையாலும், உடம் பாடிலாதவர் என முன் கூறிப் பின் அவன் என வருவித்தும் உட னிகழ்ச்சிப் பொருளுக்குப் பொருத்த மின்றியும் குடங்கம் என்ற வடசொல் சிதைந்தது எனவும் கொள்ளுதல் சிறப் பிலாமையாலும், தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் வீட்டி னருகில் உறையும் பாம்பைக் கொல்லாது நன்மை யுண்டு எனப் போற்றி வாழ்தல் வழக்குண்மையாலும், இவற்றை யெல்லாம் கண்டு புதிய பொருள் பொருந்துமா எனச்சிந்திக்க.

இதுகாறுங் கூறியவாற்றால் குடம்+கருள் என்பன இரு மொழிகள் என்பதும், திருவள்ளுவர் நுண் பொருளுக் குப் பருப் பொருள் உவமை உலகியலில் எடுத்துக் காட்டு வது இயல் பென்பதும், கருளன் என்ற சொல் தொல்காப்பி யர் இலக்கணப்படி கடைக் குறையாய் கருள் என வந்தது என்பதும், கருளன் என்ற சொல் மாணிக்கவாசகர் முதலிய பல்லோரால் எடுத்தாளப் பெற்றுள்ளது என்பதும், 'வாழ்க்கை உடனுறைந்தற்று' என இயையும் என்பதும், பாம்பைக் குடத்தில் அடைத்தல் வழக்கம் என்பதும், மக்கள் பாம்பை வீட்டில் வெறுப்பின்றி வழிபடுவ துண்டு என்பதும், ஆகவே இது சிறப்புடைய பொருள் ஆகும் என்பதும் கூறிய பொருள்களாகக் கொள்க,

இயற்றிய ஆசிரியர், மௌனசுவாமிகள்.

வெளியிடுவோர், M. குஞ்சிதபாத தேசிகர்.